உடல் ஊனமுற்றோர்களுக்கு மாநிலப் பரிசுகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(i) உடல் ஊனமுற்றோர்களுக்கும், (ii) அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள தொழிலதிபர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள மாநிலப் பரிசுகளின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (i) குருடர், செவிடர், முடவர், மன வளர்ச்சியற்றோர், தொழுநோய் நீங்கப் பெற்றோர் ஆகிய வகையினரைச் சேர்ந்த மிகவும் திறமையான உடல் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 பரிசும், பாராட்டுச் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுகிறது.

(ii) குருடர், செவிடர், முடவர், மன வளர்ச்சியற்றோர், தொழுநோய் நீங்கப் பெற்றோர் ஆகியோரைப் பணியிலமர்த்தியிருக்கும் மிகச் சிறந்த தொழிலதிபர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

Industrial Estates.

* 197. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the rate of rent charged for factory accommodation in Industrial Estates district-wise;

(*b*) whether these rents are revised periodically; and

(*c*) if so, the basis on which this revision is done?

தொழிற்பேட்டைகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட வாரியாக, தொழிற்பேட்டைகளில், தொழிற்சாலை இட வசதிக்காக விதிக்கப்படும் வாடகை வீதம் யாது?

(இ) இந்த வாடகை வீதமானது குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திருத்தி அமைக்கப்படுகிறதா?

(உ) ஆமெனில், எந்த அடிப்படையில் இந்த வரி வீதமானது மாற்றியமைக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை * ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

* 102-104-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது